பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

**02 01 2025 THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

- மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அனைத்துப்பகுதிகளிலும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தொய்வின்றி செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

- பாதுகாப்பு தொழில் உற்பத்தியில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கான ஆய்வுப்பணிகளை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

- சிறைவாசிகளிடம் சாதிய அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதை தடுக்க சிறைத்துறை கையேட்டில் மத்திய உள்துறை அமைச்சகம் திருத்தம் கொண்டுவந்துள்ளது.

- ஜம்மு காஷ்மீருக்கு, மாநில அந்தஸ்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

- ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் மோஹன் பகான் அணி இன்று – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக அம்மாநில அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாநிலத்தின் தொலைதூரப்பகுதிகள் மற்றும் உள்நாட்டு தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள் தொய்வின்றி செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இதனால், மக்களின் வாழ்க்கை எளிமையாக்கப்பட்டு, வளர்ச்சிப்பணிகள் தங்குதடையின்றி நடைபெற வழிபிறந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

**Gadchiroli** பகுதியில் 11 நக்சலைட்டுகள் நேற்று முதலமைச்சர் திரு தேவந்திர பட்நவிஸ் முன் சரணடைந்ததை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், ஏராளமான மாவோயிஸ்டுகள் மற்றும் நக்சலைட்டுகள் தீவிரவாதத்தை கைவிட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப தயாராக இருப்பதையே இது காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**‘Gatta - Wangeturi** இடையே 32 கிலோமீட்டர் சாலையை முதலமைச்சர் திறந்துவைத்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்நாட்டு தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட இப்பகுதியில் பேருந்துபோக்குவரத்து வசதி செய்யப்பட்டிருப்பது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

பாதுகாப்பு தொழில்துறை உற்பத்தியில் ஸ்டார் அப் நிறுவனங்களை கொண்டுவருவதற்கான ஆய்வுப்பணிகளை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொள்ள வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

**‘DRDO ’** நிறுவனத்தின் 67–ஆவது நிறுவன நாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய திரு ராஜ்நாத் சிங், புதிய கண்டுபிடிப்புகளையும், தொழில்நுட்பங்களையும் புத்தாக்க நிறுவனங்களில் கொண்டுவருவதன்மூலம், இந்திய பாதுகாப்புத்துறை உற்பத்தியில் புதிய வாய்ப்புகளை பெறலாம் என்றும் தெரிவித்தார்.

உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கு **DRDO** நிறுவனம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த அமைச்சர், ஆயுதப்படை பிரிவுகளுக்கான உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதையும் பாராட்டினார்.

தனியார் துறையுடன் இணைந்து ஆராய்ச்சிப்பணிகளை மேற்கொள்ளும் முயற்சியையும் பாராட்டுவதாக தெரிவித்த அமைச்சர், பாதுகாப்பு தொழில்நுட்பங்களுக்கு காப்புரிமை பெறுவதற்கான முயற்சிகளையும் இந்நிறுவனம் எடுத்துவருவதாக கூறினார்.

பாதுகாப்பு உற்பத்திக்கான தொழில்நுட்ப கட்டமைப்பை உருவாக்கும் பணியையும் துரிதமாக இந்நிறுவனம் மேற்கொண்டு வருவதாக தெரிவித்த திரு ராஜ்நாத் சிங், தொழில்நுட்ப ரீதியாக வளர்ந்துள்ள நாடுகளுடன் போட்டிபோடும் அளவுக்கு உள்நாட்டு தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கு விஞ்ஞானிகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் மூவாயிரம் ஆண்டுகள் வரலாற்றை தொகுத்து, **Jammu Kashmir and Ladakh; Through the Ages** என்ற புத்தகத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுதில்லியில் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானும் கலந்துகொண்டார்.

ஆங்கிலத்திலும், இந்தியிலும் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்த புத்தகத்தை வெளியிட்டு பேசிய திரு அமித் ஷா, வரலாற்று நிகழ்வுகளை விரிவாக இந்த புத்தகம் எடுத்துரைப்பதாக கூறினார்.

காஷ்மீரின் தொன்மை சிறப்புமிக்க கலைப்படைப்புகள் அமைந்த கோவில்கள், காலப்போக்கில் அழிக்கப்பட்டது குறித்தும் இந்த புத்தகத்தில் கூறியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

புத்த மதம், நேபாளம், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டுசெல்லப்பட்டதை இப்புத்தகம் விளக்குவதாக கூறிய அவர், பண்டைய கால அரசர்களின் ஆட்சிமுறையை விளக்கும் வகையில் அமைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்..

1947–ஆம் ஆண்டிற்கு பின்னர், அரசியல் ரீதியாக ஏற்பட்ட சில தவறுகளையும், திருத்தங்களையும் இப்புத்தகம் உள்ளடக்கியிருப்பதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>

சிறைவாசிகளிடம் சாதிய அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதை தடுக்கும் நோக்கில் சிறைத்துறைக்கான கையேட்டில் மத்திய உள்துறை அமைச்சகம் திருத்தம் கொண்டுவந்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி, சாதிய அடிப்படையிலோ, வேறு எந்த அடிப்படையிலோ சிறைவாசிகளிடம் பாகுபாடுகள் காட்டப்படுவதை முற்றிலுமாக தடுக்கும் வகையில் இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**‘habitual offender ’** என்ற பெயரில் தொடர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை மற்றவர்களிடமிருந்து பிரித்து வைக்கும் நடைமுறையும் கைவிடப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் சாதிய அடிப்படையில் சிறைவாசிகள்மீது பாகுபாடு காட்டப்படுவதை தடுப்பதற்கு சிறை கையேடுகளில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என உச்சநீதிமன்றம், மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டிருந்தது.

<<<<<<>>>>>

உலகளாவிய ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு மூன்று புள்ளி ஒன்பது சதவீதமாக உயர்ந்துள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், 2023-ஆம் ஆண்டில் ஜவுளி ஏற்றுமதியில் உலக அளவில் ஆறாவது பெரியநாடாக இந்தியா உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜவுளி ஆயத்த ஆடைகள் மற்றும் கைவினைப்பொருட்கள் ஏற்றுமதி கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 21 ஆயிரத்து 358 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது என்றும், 2023-24-ஆம் நிதியாண்டில் இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் ஏழு சதவீத வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஜவுளி பொருட்களின் இறக்குமதி கடந்த நிதியாண்டில் 15 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் விவசாயிகளிடமிருந்து கையகப்படுத்தப்பட்ட 4 ஆயிரத்து 849 ஏக்கர் நிலத்தை திரும்ப ஒப்படைக்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது

இதற்கு ஏதுவாக மகாராஷ்ட்ராவின் நில வருவாய் நடைமுறைச் சட்டத்தின் 220-ஆவது பிரிவில் உரிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது

கையப்படுத்தப்பட்ட இந்த நிலங்கள் அவற்றின் உரிமையாளர்களிடமோ அல்லது வாரிசுதாரர்களிடமோ ஒப்படைப்பதற்கு இந்த சட்டத்திருத்தம் வகை செய்கிறது.

கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் அரசின் பொறுப்பில் இருப்பதால் இதற்கு உரிய வரியை உரிமையாளரகள் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டது

சிறு, குறு விவசாயிகளின் நிலங்களை ஒப்படைப்பதற்கும் மகாராஷ்ட்ரா அரசு உரிய சட்டத்திருத்தம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளாவிற்கு வரும் யாத்ரிகர்களுக்கு தொலைத்தொடர்பு சேவை தடையின்றி கிடைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த பகுதியில் நவீன தொழில்நுட்பத்துடன் புதிய கட்டமைப்புகளை தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்கள் அமைத்துத்தர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

126 கிலோமீட்டர் நீளத்திற்கு பிரயாக்ராஜ் நகரத்தில் கண்ணாடி இழை கேபிள்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், 328 புதிய தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவிற்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து கோடிக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீருக்கு, மாநில அந்தஸ்தை விரைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த 2023-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் அளித்த உத்தரவின் அடிப்படையில் ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

புதிய இடஒதுக்கீட்டுக்கொள்கைக்கு எதிராக சில அமைப்பினர் போராட்டம் நடத்திவருவது கவலையளிப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த இடஒதுக்கீட்டுக்கொள்கை குறித்து அமைச்சரவை துணைக்குழு அமைக்கப்பட்டு அனைத்துப்பிரச்சினைகளுக்கும் குறித்த காலத்தில் தீர்வுகாணப்படும் என்றும் அவர் கூறினார்.

இலக்குகளை எட்டுவதற்கு அனைத்து முயற்சிகளையும் தமது அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்த அவர், நடப்பில் உள்ள மின் திட்டங்களை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு உமர் அப்துல்லா கூறினார்.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று மோஹன் பகான் அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இரவு ஏழரை மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

---------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில், இன்று **‘Surma ’** அணி – உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

ரூர்கேலாவில் இன்றிரவு மணி 8.15-க்கு இப்போட்டி தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>**